# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்) C 8120334

1. District : நாமக்கல் PS: ஊ.த.க.பிரிவு நாமக்கல் Year: 2025 FIR No.: 3/AC/2025 Date: 12.04.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 11.04.2025 Date to : நாளை சுமார் 11 மணி
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 11.04.2025 Time to : மாலை சுமார் 5 மணி
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 12.04.2025 Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் at 07.10 மணிக்கு நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.04.2025 Volume - I நேரம் 07.10 மணிக்கு.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சர்வே செக்சன்
Beat Number : (b) Address : திருச்செங்கோடு தாசில்தார் அலுவலகம். சுமார் 30 கி.மீ மேற்கு.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
~~சுமார் 30 கி.மீ மேற்கு~~ 12/4/25

6. Complainant /Informant (a) Name : திருமதி. A. ஜெயமேனி (b) Father's/ Husband's Name : கார்த்திக்.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 33 (d) Nationality :- இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : 72/34/3 மெகதியர் தெரு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பூபதி, சர்வேயர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தி சமர்பிக்கப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A Vijayakumar 12/04/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 12/04/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.04.2025 at 09.30 AM.

Name பெயர் இ. சுபாஷினி.
Rank நிலை ....................No. எண் .........
காவல் கண்காணிப்பாளர்,
ஊ.த.க. பரிவு, நாமக்கல்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 12.04.2025-ஆம் தேதி சனிக்கிழமை காலை 07.10 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, புகார்தாரர் திருமதி.A.விஜயகுமாரி (வயது-33), க/பெ. கார்த்திக், கதவு எண்.72/34/3 முகமதியர் தெரு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல், திருமதி.A.விஜயகுமாரி (வயது-33), க/பெ. கார்த்திக், 72/34/3 முகமதியர் தெரு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். செல்: 9884220969, பெறுதல், உயர்திரு. காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல். நான் திருச்செங்கோடு டவுன் முகமதியர் தெருவில் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். எனது கணவர் கார்த்திக் சென்னையில் உள்ள TNPSC தலைமை அலுவலகத்தில் உதவியாளராக வேலை செய்து வருகிறார். நாங்கள் 31.05.2023-ஆம் தேதி திருச்செங்கோடு நகரம், வார்டு-சி கைலாசம்பாளையம், பிளாக்-12, சர்வே எண்.5 உட்பிரிவு-19-ல் 1470 சதுர அடி கொண்ட பிளாட் நிலம் எனது கணவர் பெயரில் விலைக்கு வாங்கியிருந்தோம். பின்னர் நாங்கள் 19.02.2025-ஆம் தேதி கூட்டுப்பட்டாவில் பெயர் சேர்க்க கேட்டு விண்ணப்பம் செய்ததன் பேரில் 05.03.2025 அன்று புல ஆய்வுக்குப் பின்னர் கூட்டுப்பட்டாவில் எனது கணவர் பெயர் சேர்க்கப்பட்டது. அந்த நிலம் கூட்டுப்பட்டாவில் இருந்து வந்தது. எனது கணவர் சென்னையில் புதியதாக வேலைக்கு சேர்ந்து புரபேசன் பீரியடில் லீவு கிடைக்காததால் நான் அவரது பெயரில் அந்த நிலத்திற்கு தனிப்பட்டா பெறுவதற்கு 10.03.2025-ஆம் தேதி காலை ஆன்லைனில் திருச்செங்கோடு இ-சேவை மையத்தில் விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்ப எண்.2025/0154/09/000560, நாள்: 10.03.2025 ஆகும். அதன் பின்னர் விண்ணப்பம் தொடர்பாக ஒருநாள் காலை நான் திருச்செங்கோடு தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று அங்குள்ள சர்வே செக்சனில் சர்வேயர் திரு.பூபதி அவர்களை நேரில் பார்த்து ஆன்லைன் விண்ணப்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களை இணைத்து கொடுத்துவிட்டு வந்தேன். ஆனால் அதன் பின்னரும்

மேற்படி விண்ணப்பம் தொடர்பாக புல ஆய்வு செய்யாமல் நிலுவையில் இருந்து வந்தது. இந்நிலையில் 07.04.2025 அன்று எனது கணவர் செல்போன் எண்.8503543563-க்கு தங்களது உட்பிரிவு பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் எண் தொடர்பாக திருச்செங்கோடு நகர சார் ஆய்வாளர் 07.04.2025 அன்று புல ஆய்வு மேற்கொள்ள உள்ளார் என்றும், தொடர்புடைய மூல ஆவணங்களை அவரது பரிசீலனைக்கு தயார் நிலையில் வைத்திருக்குமாறும் குறிப்பிட்டு மெசேஜ் வந்தது. ஆனால் 07.04.2025 அன்று நாங்கள் சென்னையில் இருந்ததால் புல ஆய்வுக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க முடியவில்லை. ஆகையால் சென்னையிலிருந்து நான் மட்டும் திருச்செங்கோடு வந்த பிறகு 11.04.2025-ஆம் தேதி திருச்செங்கோடு தாசில்தார் அலுவலகத்திற்கு காலை சுமார் 11.00 மணிக்கு மேல் சென்று அங்குள்ள சர்வே செக்சனில் சர்வேயர் திரு.பூபதி அவர்களை சந்தித்து செல்போனில் 07.04.2025 அன்று புல ஆய்வு மேற்கொள்ள ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறு என வந்த மெசேஜை பற்றி சொல்லி விசாரித்தேன். அப்போது அவர் தங்களது நிலத்தை முன்னதாக கூட்டுப்பட்டாவில் பெயர் சேர்க்கும் போதே நிலத்தை அளந்துவிட்டதால் தற்போது தனியாக புல ஆய்வு செய்ய தேவையில்லை என்று கூறி என்னை தனியாக அழைத்து அலுவலக போர்டிகோவில் வைத்து தனிப்பட்டா வழங்க ரூ.10,000/- எனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்றும், பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு இன்று (11.04.2025) மாலை 5 மணிக்குள் பணத்தை கொண்டு வந்து கொடுக்குமாறும் சொன்னார். நான் அதற்கு மாலை வந்து தங்களை நேரில் பார்ப்பதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு நான் 11.04.2025 ஆம் தேதி மாலை சுமார் 5 மணிக்கு திருச்செங்கோடு தாசில்தார் அலுவலக சர்வே செக்சனுக்கு சென்று சர்வேயர் திரு.பூபதி அவர்களை மீண்டும் நேரில் பார்த்து சார் என்னால் தாங்கள் கேட்ட பணம் ரூ.10,000/-த்தை ஏற்பாடு செய்ய முடியவில்லை என்றும், எனக்கு வேலையை முடித்துக் கொடுங்கள், பிறகு பார்க்கலாம் என்று கூறினேன். அதற்கு அவர் வேண்டுமானால் நான் கேட்ட பணத்தில் ரூ.1,000/- குறைத்துக் கொண்டு ரூ.9,000/- மட்டும் ஏற்பாடு செய்துவிட்டு நாளை வந்து நேரில் பார்த்து கொடுங்கள், அப்போது தான் உங்கள் வேலையை முடித்துத் தரமுடியும் என்று உறுதியாகக் கூறி அனுப்பிவிட்டார். பின்னர் நான் எனது கணவரிடம் மேற்படி நடந்த விசயத்தை சொன்னேன். எங்களுக்கு சர்வேயர் திரு.பூபதி அவர்கள் கேட்ட லஞ்சப் பணம் ரூ.9,000/-த்தை கொடுத்து

வேலையை முடிக்க விருப்பம் இல்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட சர்வேயர் திரு.பூபதி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/- XXXXXX (A.Vijayakumari) 12.04.2025. (A.VIJAYAKUMARI) 9884220969.

மேற்கண்ட புகாரினை பெற்று, படித்துப் பார்த்து, புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், வழக்கின் எதிரி திரு.பூபதி, சர்வேயர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் என்பவருக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் ஏதும் உள்ளதா என்பது குறித்தும், எதிரியின் முன் நடவடிக்கை குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரியின் முன் நடத்தை திருப்தியாக இல்லையென்பதும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 12.04.2025-ஆம் தேதி சனிக்கிழமை காலை 08.30 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.03/AC/2025, u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை மாண்பமை தனிநீதிபதி/தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

12/04/25

(M. சுபாஷிணி)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.